# லக்கல-பல்லேகம பிரதேச சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள லக்கல-பல்லேகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வறட்சித் தாக்கமுள்ள பிரதேசங்களுக்கு நீரை வழங்குவதற்காக இடர் முகாமைத்துவ அமைச்சிலிருந்து கிடைத்து சபையின் பொறுப்பில் எடுக்கப்பட்ட 1000 லீற்றர் கொள்ளளவையுடைய 13 நீர்த்தாங்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கில் வருமானப் பங்களிப்பிற்கான கணக்கின் மீதி சமமாக இருக்க வேண்டிய போதிலும் அந்த மீதிகளில் ரூபா 4,146,848 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் வங்கியில் வைப்புச் செய்யப்படாத கையில் மீதிப் பணமாக ரூபா 17,737 தொகையான மீதி காணப்பட்டதுடன் அது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 542,729 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,111,126 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 530 | - | 530 |
| (ii) | வாடகை | 256 | 68 | 188 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 744 | 687 | 57 |
| (iv) | சேவைக் கட்டணம் | 1,295 | 235 | 1,060 |
| (v) | பிடியாணைக் கட்டணம் | 2,044 | 1,272 | 772 |
| (vi) | ஏனைய வருமானம் | 1,857 | 1,517 | 340 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,292,132 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 169,708 தொகையும் காணப்பட்டன.

### 2.2.3 ஊழியர் கடன்

சபையில் நிரந்தர சேவையில் கடமையாற்றுகின்ற ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு நீர் தொழிலாளர் என்போர் 2012 ஏப்ரல் 11 ஆந் திகதி தொடக்கம் சேவைக்கு சமூகமளிக்காதிருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 94,309 ஊழியர் கடன் மீதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீர்க் கட்டணம்

11 அரசாங்க நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 159,097 தொகையான நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2011 ஆம் ஆண்டில் மாகாண சபை உறுப்பினரின் நிதியேற்பாட்டின் கீழ் தாஸ்கிரிய இசிபத்தனாராம விகாரையின் பிரிவெனாவிற்கு டெஸ்க் வங்கி வழங்கும் வகையில் 2011 திசெம்பர் 25 ஆந் திகதி ரூபா 74,850 தொகை தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவின் பிரகாரம் 2□x6□x3□அளவில் 21 டெஸ்க்களும், 1□.5□x1□.6□ அளவில் 13 வங்கிகளும் பெறப்பட்டு இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டு அந்த பிரிவெனாவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2013 ஏப்ரல் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 12 டெஸ்க் மற்றும் 10 வங்கிகளும் 03 ஆசிரியர் மேசைகளும் வழங்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 2012 ஏப்ரல் 11 ஆந் திகதி தொடக்கம் சேவையை விட்டுச் சென்ற சபையின் பதவியணியினருக்குரிய பதவியணியின் இரண்டு உதவியாளர்களுக்கு ஏப்ரல்

(இ) 2010 ஆம் ஆண்டின் ஜாதிக சவிய கமநெகும செயற்திட்டத்தின் கீழ் லக்கல □ பல்லேகம பிரதேச செயலகப் பிரிவில் மத்திய வாய்க்கால் பிரதான வீதிக்கு கொங்கிரீட் இடுதல் லக்கல □ பல்லேகம பிரதேச செயலகத்தினால் ரூபா 700,000 தொகையான மதிப்பீட்டில் லக்கல □ பல்லேகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2010 செப்தெம்பர் 08 ஆந் திகதி மத்திய வாய்க்கால் சமூர்த்திச் சங்கத்திற்கு ரூபா 700,000 தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு ரூபா 549,080 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் வேலை உரியவாறு நிறைவேற்றப்படாமையினால் இறுதிப் பட்டியலான ரூபா 131,046 தொகையான கொடுப்பனவு பிரதேச செயலகத்தினால் கைவிடப்பட்டிருந்தது. எனினும் பிரதேச சபையினால் ஒப்பந்தக்காரருக்கு சபை நிதியத்திலிருந்து 2011 சனவரி 06 ஆந் திகதி ரூபா 50,000 தொகை செலுத்தப்பட்டமை சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமாக அவதானிக்கப்பட்டது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஹத்தோட்ட அமுன நூலகத்தில் மீளக் கையளிக்கப்படாத 339 புத்தகங்கள் தொடர்பான பெறுமதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 252-6565 ஆம் இலக்க டபள் கப் வாகனம் விபத்திற்குள்ளாகியமையின் காரணமாக ஏற்பட்ட ரூபா 37,850 தொகையான நட்டத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கோ அல்லது இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய ரூபா 30,000 பெறுமதியான சோனி வகையைச் சேர்ந்த டிஜிடல் கெமரா செயற்படாமையினால் பெறுமதியை அக் கெமராவுக்குப் பொறுப்பாக இருக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியதாக சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாணிக்க அகழ்விற்காக அங்கீகாரம் வழங்கும் போது ரூபா 2,000 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படுவதுடன் அவ்வாறு அனுமதி வழங்கும் போது சபையின் வருமானப் பரிசோதகரின் சிபார்சுடன் தலைவரின் அங்கீகாரமும் பொது சுகாதாரப் பரிசோதகரின் சிபார்சுடனும் பிரதேச சுகாதார

சேவைகள் பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களிலிருந்து 120 தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது தலைவரின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக உப விதிகள் விதிக்கப்படாது சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(உ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிதி மற்றும் கொள்கைகளைத் தயாரித்தல், வீடமைப்பு மற்றும் சனசமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவை மற்றும் சுற்றாடல் வசதிகளுக்காக குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள ஆற்று மணல் கொண்டு செல்லல், ஆதனவரி, மணிக்கக்கல் அகழ்தலுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல், முச்சக்கர வண்டிக் கட்டணம் அறவீடு செய்தல், பரிவர்த்தனைக் கோபுரங்கள் போன்றவை மூலம் சபைக்கு ஏதாவது வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உப விதிகள் விதித்து வருமானத்தைச் சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரசேத்தில் முறையாக கழிவுப் பொருட்களை அகற்றும் வேலைத் திட்டம் காணப்படாமையினால் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் பிரிக்கப்படாமல் சபையின் டெக்ரர் மற்றும் ஊழியர்களை ஈடுபடுத்தி வாரத்திற்கு ஒரு தடவை பலகொல்லயாய பிரதேசத்திலுள்ள தனியார் காணியொன்றில் அகற்றப்படுகின்றமையும் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத் திட்டத்திற்காக சபை கவனம் செலுத்தாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.